# The Very First appeal to the Public

  

## காந்தி நிகேதனம்

கல்லுப்பட்டி P.O.
மதுரை ஜில்லா,
10-5-40

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு

வாழு மனிதருக் கெல்லாம் ;

பயிற்றிப் பல கல்வி தந்து-இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்.

பாரத தேசத்தில் புதிய சகாப்தம் ஆரம்பமாவதற்குரிய அறிகுறிகளை இப்பொழுது ஆங்காங்கே காண்கிறோம். நம் நாடு பூரண சுதந்திரம் பெற்று, கல்வி பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணம் தேச மக்களிடை வெகு வேகமாய்ப் பரவி வருகிறது. இந்த தேசத்தை 'இங்கு ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை' என்று சொல்லும்படியான ஓர் ஒப்பிலாத சமுதாயமாகச் செய்ய வேண்டுமென்ற அவாவும் ஆர்வமும் நம்முள் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்முள் தோன்றியுள்ள இந்த மகத்தான மனக்கிளர்ச்சியும், ஊக்கமும், உற்சாகமும், வெறும் பேச்சளவில் நின்றுவிடாமல் தேசத்தைப் புனருத் தாரணம் செய்வதற்குரிய நிர்மாண வேலைகளாகப் பரிணமிக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் கருதிய காரியம் சித்தி பெறும்.

நிர்மாண வேலைகளை திடீரென்று இரண்டொரு தினங்களில் செய்து முடிக்க இயலாது. அவற்றை வெற்றியுடன் செய்து காட்ட நிரந்தரமான ஸ்தாபனங்கள் வேண்டும். தன்னலம் மறந்து, தாய் நாட்டின் சேவைக்காகவே தங்களைத் தத்தம் செய்து கொள்ளும் திடசித்தமுள்ள ஊழியர்கள் வேண்டும். பொதுஜனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் வேண்டும்.

சுயேச்சை வாய்ந்த மேல் நாடுகளில் கூட, சர்க்கார் சம்பந்தமற்ற ஊழியர்களால் நடத்தப்படும் பொதுஜன ஸ்தாபவனங்களே அவ்வந் நாட்டுக் கல்வி அபிவிருந்திக்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் பெரிதும் காரணமாய் இருந்து வருகின்றன. சேவா நிலையங்கட்கு உதவி செய்து, ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதை அந்நாட்டு மக்கள் தங்கள் கடமையாகக் கருதுகின்றார்கள்.

பாரததேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி அடிகளின் திட்டங்களுக்கிணங்க நிர்மாண வேலை செய்வதற்காகவும் பொது ஜனங்களிடை காந்தியடிகளின் தத்துவங்களைப் பரப்புவதற்காகவும் '**காந்தி நிகேதனம்**' என்னும் பெயரால் மதுரைக்குத் தென்மேற்கே 24-வது மைலில் **கல்லுப்பட்டி** என்னும் கிராமத்தில் (மதுரை-ஸ்ரீவில்லிபுத்தூர் ரஸ்தாவிற்குச் சமீபத்தில்) ஆசிரமம் ஒன்று ஸ்தாபிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன. 28-4-40ல் ஆசிரம அஸ்திவாரக் கல் நாட்டு விழாவை திருச்சி **டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன்** அவர்கள் நடத்தி வைத்தார்கள். சீரிய நோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பெறும் இந்தச் சேவா நிலையம் சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்குத் துணைபுரியுமாறு நம் நாட்டுச் சகோதர சகோதரிகள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**ஏ.வைத்தியநாதய்யர்,**
**நா. ம. ரா. சுப்பராமன்,**
டிரஸ்டிகள்,
**கோ.வேங்கடாசலபதி**,
காரியதரிசி.